# உதயன்

விலை ரூபா 6-00

ஈடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 11 (25-05-1998) திங்கட்கிழமை UTHAYAN — A Lively National Tamil Daily — திர்: 152

26 MAY 1998

## இந்திய அமைச்சர் சுவராஜ் சந்திரிகாவுடன் பேச்சு

கொழும்பு, மே 25

இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

இப்பேச்சு சுமார் 45 நிமிட நேரம் நீடித்தது.

பாரதீய ஜனதா அரசு பதவி ஏற்ற பின்னர் இலங்கைக்கு வருகை தந்த முதலாவது அரச பிரமுகர் சுஸ்மா சுவராஜ் ஆவார்.

சார்க அமைப்பு நாடுகளின் தொலைத்தொடர்பு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுஸ்மா சுவராஜ் இலங்கை வந்துள்ளார்.

அண்டை நாடுகளில் பயங்கரவாதத்தை இந்தியா ஊக்குவிக்காது என்றும் —

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எந்தவித ஆதரவும் இது தராது என்றும் சுஸ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

## செங்கலடி இராணுவ முகாம் மீது புலிகள் 2 மணி நேரம் தாக்குதல்

கொழும்பு மே 25

மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு படையினர், இரு புளொட் உறுப்பினர் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

8 படையினர், 7 புளொட் உறுப்பினர்கள், 1 ரெலோ உறுப்பினர் உட்பட 17 பேர் காயம் அடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடி பதுளை வீதியில் கொடுவாமடு பாலத்தில் உள்ள படையினரின் சோதனை முகாமும் அருகில் இருந்த புளொட் முகாமுமே தாக்கப்பட்டன.

நேற்று அதிகாலை 1.00 மணியில் இருந்து 3.00 மணி வரை இத் தாக்குதல் நீடித்தது.

கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர்கள் காளிமுத்து ராஜா செல்வக்குமார் (பாஸ்கர்) வவுனியா, சுப்பிரமணியம் யோகேஸ்வரன் (யோகேஸ்) திருமலை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

செங்கலடி — பதுளை வீதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் மேற்படி பாலந்தான் பிரிக்கின்றது.

இராணுவ சோதனைச் சாவடியுடன் இணைந்ததாக

(10ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் கதிர்காமர் நேற்று அவசரமாக சீனா புறப்பாடு!

## இந்தியாவுக்கு ஆதரவான போக்கினால் நெருக்கடி?

கொழும்பு, மே 25

**இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று அவசரமாக சீனா புறப்பட்டுச் சென்றார். நான்கு நாள்கள் அவர் சீனாவில் தங்கி இருந்து சீனத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவார்.**

கதிர்காமரின் அவசரப் பயணத்துக்குப் பல்வேறு காரணங்கள் ஊகிக்கப்படுவதாகச் செய்தித்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெறும் யுத்தத்துக்கு அதிக ஆயுத உதவி வழங்கும் நாடு சீனா ஆகும்.

(10ஆம் பக்கம் பார்க்க)



அப்ப சமாளிப்புகளிலேயே காலம் போகுது எண்டு சொல்லுங்கோ.........!

## வவுனியா நகர் நேற்று திடீர் சுற்றிவளைப்பு

### எவரும் கைதாகவில்லை

வவுனியா, மே 25

வவுனியா நகரப் பகுதி நேற்று நண்பகல் படையினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது.

நண்பகல் 12 மணியளவில் வவுனியா பஸ்நிலையத்தில் இருந்து மணிக்கூண்டு சந்தி வரை உள்ள பகுதியில் சென்ற பொதுமக்கள் திடீரென படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். வாகனங்கள் மறிக்கப்பட்டன.

தலையாட்டிகள் இருவர் வாகனம் ஒன்றில் அந்தப் பாதையூடாக அழைத்து வரப்பட்டனர்.

ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

(இ-164-3)

# வடக்கு - கிழக்கு பகுதி உள்ளூராட்சி உறுப்பினருக்கு பொலீஸ் பாதுகாப்பு

## சரோஜினி கொலையை அடுத்து அரசு ஆராய்கிறது

கொழும்பு, மே25

வடக்கு — கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பொலீஸ்பாதுகாப்பு வழங்குவது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளதால், பெரும்பாலான உறுப்பினர்கள் பதவி விலக முற்படுவதாகவும்—

இவ்வாறு அவர்கள் பதவி விலகினால் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துவிடும் என அரச வட்டாரங்களில் கருதப்படுவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாரம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்படலாம் என்றும் —

விரைவில் பாதுகாப்பு வழங்கப்படலாம் என்றும் — மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாநகர மேயர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## வேட்பாளரைத் தெரிய பொ. ஐ. மு. இன்று கூடும்

### சிறிமானிக்கு அழைப்பில்லை

கொழும்பு, மே 25

தெற்கில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் ஒன்றை பொது மக்கள் ஐக்கிய முன்னணி இன்று கூட்டுகிறது.

இக் கூட்டத்துக்கு அரசில் அங்கம் வகிக்கும் சிறிமானி லலித் அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய முன்னணி (லலித் பிரிவு) அழைக்கப்படவில்லை.

இக் கூட்டத்தில் மாகாண சபைகளுக்கு முதன்மை வேட்பாளர்களாக ஐந்து அமைச்சர்களை நிறுத்துவது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும்—

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் போது அந்த அமைச்சர்கள் பதவி விலகுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் — இந்த 5 மாகாண சபைகளும் அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கும் 21 ஆம் திகதிக்கும் இடையில் கலைக்கப்படலாம் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## குஞ்சுக்குளம் பகுதியில் மோதல்

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் குஞ்சுக்குளத்துக்கு வடமேற்கே இடம்பெற்ற மோதலில் நான்கு புலி உறுப்பினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 25

கடந்த சில வாரங்களில் விடுதலைப் புலிகளின் இரு தற்கொலை அணிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவி இருப்பதாக தகவல் வெளியானதை அடுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொது மன்னிப்புக் காலம் முடிவு

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களுக்கு நேற்றுக் காலை 8-00 மணி முதல் வழங்கிய பொது மன்னிப்பு நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பௌத்தபிக்குகளும், சமயப் பெரியார்களும் விடுத்த கோரிக்கையை ஏற்று இறுதிச் சந்தர்ப்பமாக இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. (இ-10-3)

## பதில் தாக்குதலில் 2 இளைஞர்கள் பலி!

மட்டக்களப்பு, மே 25

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு சம்பவங்களில் பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

சாம்பல் தீவு சந்தியில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இச் சம்பவங்கள் இடம்பெற்றன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றவுடன் நடைபெற்ற பதில் நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை துரைரத்தினம்

(இளைப்பாறிய கிராமத் தலைமைக்காரன்,
வளலாய், பத்தமேனி J/75)

வளலாயைச் சேர்ந்த கனகசபை துரைரத்தினம் 98- 05- 24 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகசபை விதானையார், முத்தாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மூத்தபுதல்வரும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் சகோதரரும் ஸ்ரீ கனகசபேசன் (உதவி அதிபர், பளை மாசார் அ. த. க. பாடசாலை), சந்திரகுமார், திருக்கேதீஸ்வரன், சிவகுமார் (கேதீஸ் லொறி உரிமையாளர்) ஆகியோரின்பாசமிகு தந்தையும், மல்லிகாதேவி, யோகேஸ்வரி (ஆசிரியை, அச்சுவேலி ம. வி ) ஆகியோரின் மாமனாரும், சிவப்பிரியனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(98-05-25) திங்கட்கிழமை மதியம் 1. 00 மணியளவில் பத்தமேனியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று ஹணன் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. ஸ்ரீ கனகசபேசன்,
து. சந்திரகுமார்,
து. திருக்கேதீஸ்வரன்,
து. சிவகுமார்.
(பிள்ளைகள்)

சந்நிதி வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(56258)

## கந்தசாமி சறோஜினிதேவி

(மங்கா)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி சறோஜினிதேவி 22 - 05 - 1998 அன்று அகால மரணமானார்.

அன்னார் கந்தசாமி (பயினா) - இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், கருணாநிதி சகுந்தலா தேவி (பிரான்ஸ்), பாலசிங்கம் சாந்தினிதேவி (சவுதி), கிருபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24-05-98) இலக்கம் 8, சோமகிரி பிளேஸ், விவேகானந்தா வீதி, கொழும்பு - 6 இல் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி அருளானந்தன்

''ஜெயந்தம்'',
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(56245)

## திருவிளங்கம் செல்வச்சந்திரன் (கிளி)

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்,
அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வச்சந்திரன் அவர்கள் 22 — 05 —1998 வெள்ளிக்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

இவர் திருவிளங்கம் நல்லம்மாவின் கனிஷ்ட புதல்வனும், சிற்றம்பலம்(புத்தூர் சிவனாலயதர்மகர்த்தா), செல்லம்மாவின் பாசமிகு மருமகனும், பராசக்தி (முன்னாள் எழுது வினைஞர், கச்சேரி), பாசமிகு கணவனும், பாலச்சந்திரன் (முன்னாள் ஆசிரியர், சோமஸ்கந்தா), ராணிவிமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகஜனா, சிவமாதங்கி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவசேனா, ஸ்ரீ வள்ளிநாயகி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனனும், விஸ்வலிங்கம், கந்தையா ஆகியோரின் பாசமிகு சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திரு. திருமதி தி. கந்தையாபிள்ளை

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(56246)

## கந்தையா நாகம்மா

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நாகம்மா 24-05-98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராசையா, சங்கரப்பிள்ளை இராஜரட்ணம் (ராஜன் மில், புன்னாலைக்கட்டுவன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோன்மணி, செல்வரஞ்சிதராணி, காலஞ்சென்ற வினோகரன், மனோகரன் (கனடா), காலஞ்சென்ற செல்வி யசோதா, பாக்கியராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நல்லதம்பி, சிறிஸ்கந்தராஜா, சாந்தநாயகி, செல்வநாயகி, குணநாயகி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [25-05-98] திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் புன்னாலைக்கட்டுவன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விலங்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மனோகரன்
(மகன்)

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

[56251]

## தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு

தென்மராட்சி, மே 25

பளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு விரைவில் நடத்தப் படவுள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் சங்கங்கள் தமது பிரதிநிதியின் பெயரை பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவு செய்து இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் ச. புத்திசிகாமணி தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு நடத்தப்படுவது குறிப்பிடத் தக்கது. (இ-117)

## வீடியோர் படக்காட்சி

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம் ஏற்பாடு செய்துள்ள சுவாமி விவேகானந்தர் பற்றிய வீடியோப் படக்காட்சி எதிர்வரும் புதன்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். (இ-4)

## தீ விபத்தில் காயம்

அடுப்பினுள் மண்எண்ணெய் ஊற்றிப் பற்றவைத்த போது குபீரெனப் பற்றிய தீயினால் அடுப்பைப் பற்றவைத்தவர் எரிந்து படுகாயமடைந்தார்.

மானிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லத்துரை காளிப்பிள்ளை (வயது 75) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-139-15)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
திங்கள், செவ்வாய் முதல்
சிவாஜி, ஜெயலலிதா
நடித்த
அவன்தான்மனிதன்
நேரம்:- 10-30, 2-30
பழைய நேரம்
தொலை பேசி இல:
070 - 212223
(55969)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்:
25 - 05 - 98 திங்கள்
அகல வெண் திரையில்
ரஜனி - சோபனா
நடித்த
சிவா
( CD வெளியீடு )
காட்சி:- 10-30, 2-30
(56259)

இம் மாதத்திற்கான மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களும், மாதாந்தப் புலமைப் பரிசில் வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.
BOND யாழ். நகர்.
(56266)

## சீவல் தொழிலாளர்கள் பெருமளவில் பாதிப்பு

அச்சுவேலி மே 25

யாழ். குடாநாட்டில் சீவல் தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் முழுமையாக நடைபெறாமல் முடக்கப்பட்ட நிலை தொடர்கின்றது.

சீவல் தொழிலாளர் குடும்பங்கள் வறுமை நிலையில் இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சீவல் தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு உதவியாகச் செயற்பட்டு வந்த வடிசாலைகள் கருப்பட்டித் தொழிற்சாலைகள் முழுமையாகச் செயற்படாமல் இருப்பதால் பனை - தென்னைகளில் இருந்து கள் இறக்குவது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறுகின்றது. (இ-11)

உ

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

### மஹோற்சவம்

ஷெ ஆலய மஹோற்சவம் நிகழும் வெகுதானிய வருஷம் வைகாசி மாதம் 17 ஆம் நாள் (31-05-98) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருப்பதை முன்னிட்டு

### அந்தரீத பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்

29-05-98 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து விசேஷ யாகபூசை, ஆராதனைகள் இடம்பெற்று நீண்ட இடைவேளைக்குப் பின் விநாயகப்பெருமான் திருவீதி உலா வந்து அருள் பாலிக்கவுள்ளார். ஊர்ப்பொதுவாக நடைபெறவுள்ள இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நிகழ்வதற்கு, அடியார்கள் வேண்டிய பொருள்களையும் பணத்தையும் ஆலய செயலகத்தில் ஒப்படைக்கவும்.

ஆலயக் குருமார்களும்
தர்மகர்த்தாக்கள் சபையினரும்.

(56264)

விக்னா கல்வி நிறுவனம்
மாதாந்தப் பரீட்சை 3 இல் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டு 6 | T. துஜீவன் | யா/இ/க. |
| ,, 7 | Y. துளசிகா | யா/இ/ம/க. |
| ,, 8 | V. விஜயலதா | யா/வே/ம/க. |
| ,, 9 | T. ரஜீவன் | யா/இ/க. |
| ,, 10 | T. அனிற்றா | யா/தி/ச/ம/ம/வி. |
| ,, 11 | A கெடின்சன் | யா/ம/க. |

Day Class

| | | |
|---|---|---|
| ,, 11 | S. சுதேஷ் — | விக்னா |

மாதாந்தப் பரீட்சை 4
31 – 05 – 98 காலை 8-00 மணிக்கு நடைபெறும்.
பதிவு செய்த நிறுவனங்கள் 30-05-98 வினாத்தாள்களுடன் விடைகளும் பெற்றுக் கொள்ளலாம்.
விக்னா பரீட்சைப் பகுதி
★ O/L Day Class பிரிவு 2 வெகு விரைவில்.
(56260)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் 3 ஆம் வருட மருத்துவ பீட மாணவன்

ப. மயூரேசன்

அவர்களின் தாயார்

### திருமதி பரமேஸ்வரி பரமகுருநாதன்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மருத்துவ பீட மாணவர்கள்
(17 ஆம் அணி)

(56265)

உ

## நன்றி நவிலலும் அறிவித்தலும்

ஆவரங்கால்

### ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்த சர்மா

(இசை ஆசிரியை)

அன்புடையீர்!

21-05-1998 அன்று கொழும்பில் சிவபதமெய்திய எமது சகோதரி ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்த சர்மா அவர்களின் மரணச் செய்தி அறிந்து அன்னாரினது இல்லத்துக்கும், எமது இல்லத்துக்கும் வருகை தந்து எமக்கு ஆறுதல் கூறிய ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியைகள் அன்னாரின் சகோதரர் ஸ்ரீ. அ. நா. சுப்பிரமணியக் குருக்களின் இல்லத்தில்(160, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13) பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| 30-05-1998 | சனிக்கிழமை | தசாகம் (கல்லெடுப்பு) |
| 31-05-1998 | ஞாயிறு | ஏகோதிஷ்டம், மாசியம் |
| 01-06-1998 | திங்கள் | சபிண்டீகரணம் |
| 02-06-1998 | செவ்வாய் | கிருகயஜ்ஞம், சமாராதனை. |

- அ. நா. சோமாஸ்கந்தசர்மா,
(சகோதரர்)
மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

(56263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகள் மீதான சித்திரவதை உடன் நிறுத்தப்பட வேண்டும்!

## இலங்கை அரசிடம் ஐ. நா. கோரிக்கை

நியூயோர்க், மே 25

**பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப் படுபவர்கள் சித்திரவதை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட்டு சந்தேக நபர்களை நீதியின் முன் நிறுத்த வழிவகை செய்யப்பட வேண்டும்.**

**ஐ. நா. சபையின் சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதாபிமானமற்ற நடவடிக்கைக்கு எதிரான அமைப்பு மேற்கண்டவாறு இலங்கை அரசிடம் கோரியுள்ளது.**

ஜெனிவாவில் இம்மாதம் 5 ஆம் திகதி முதல் ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பினால் நடத்தப்பட்ட மாநாட்டில் இலங்கையில் நடைபெற்றுவரும் சித்திரவதைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இதனையடுத்தே ஐ. நா. வின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பு சித்திரவதைகளை உடனடியாக நிறுத்தும்படி கோரியுள்ளது.

சித்திரவதைகள் மூலம் பாதிக்கப்படுபவர்களுக்கு இலங்கை உயர் நீதிமன்றம் நட்டஈடு பெற்றுக் கொடுப்பது குறித்து ஐ. நா. தாபனத்தின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளதுடன் அவற்றை மேற்கொள்ளும் அதிகாரிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற சித்திரவதைக்கு எதிரான மாநாட்டில் இலங்கையில் சித்திரவதைகள் நடைபெறுவதை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கைபிரதிநிதி எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற சித்திரவதை சம்பவத்திற்காக 6 பொலீஸாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினால் 94 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சித்திரவதைக்கெதிரான சட்டத்தில் ஐ. நா. தாபனத்தின் சித்திரவதைக்கான அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள விவரணத்திற்கிணங்க மாற்றம் செய்யப்படுவதுடன், இலங்கையில் அமுலில் உள்ள அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத்தடுப்புச்சட்டம் ஆகியனவும் சித்திரவதைக்கு எதிரான அமைப்பின் அறிக்கையினை ஒட்டிய விதத்தில் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் சித்திரவதைக்கு எதிரான அமைப்பு அரசைக்கேட்டுள்ளது

மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தொண்டர் அமைப்புக்கள் நடு நிலையாகவும், திறமையான விதத்திலும் செயற்படத்தக்கவகையில் பலப்படுத்தப்படுவதுடன் ஐ. நா. சபையின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பிடம் இலங்கையில் உள்ள தனிப்பட்ட நபர் ஒருவரும் சித்திரவதை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அறிவிக்க முடியும் என பிரகடனப்படுத்துவதுடன், இலங்கையில் சித்திரவதை நடைபெற்றால் சித்திரவதைக்கு எதிரான ஐ. நா. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் இலங்கை சித்திரவதை தொடர்பில் தனது கடப்பாடுகளைச்செய்யவில்லை என அறிவிக்கலாம் என இலங்கை அரசு பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளது.

இதனைவிட ஜூன் மாதம் 26 ஆம் திகதியை சித்திரவதைக்கு எதிரான தினமாக பிரகடனப்படுத்துமாறும் ஐ. நா. அமைப்பு இலங்கை அரசைக் கோரியுள்ளது.

(ஐ-10)

## விமானப்படை விமானம் விபத்து

புதுடில்லி, மே 25

இந்திய விமானப்படை விமானம் ஒன்று நேற்று முன் தினம் பித்தாரில் வீழ்ந்து நொருங்கியது.

விமானப்படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட உடனேயே விமானம் தீப்பிடித்துக் கொண்டது. இவ் விபத்தில் பிளைட் லெப்டினன்ட் ஒருவர் உயிரிழந்தார். ஸ்குவார்ட்ரன் லீடர் காயமுற்றார். (ஐ-6)

## பாதுகாப்புஅமைச்சர்

ஜகார்த்தா, மே 25

புதிய இந்தோனேசியாவின் புதிய அதிபர் ஹபிபீ இராணுவத் தளபதிஜெனரல் பிரான்டோவை தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சராகவும், ஆயுதப்படைகளின் தலைவராகவும் இயங்க அனுமதித்துள்ளார். (ஐ)

**உலக அரங்கில்**

## அணுசோதனை பற்றி

## பாகிஸ்தான் அரசு கொள்கை அறிக்கை

இஸ்லாமாபாத், மே 25

இந்தியா அண்மையில அணு வெடிப் பரிசோதனை நடத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தானும் அணுவெடிப் பரிசோதனையை நடத்துமா இல்லையா என்பது குறித்த அரசின் நோக்கம் பற்றிய கொள்கை அறிக்கை ஒன்றை பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரிப் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

பாகிஸ்தான் அணுவெடிப் பரிசோதனை ஒன்றை நடத்துமா அல்லது நடத்தாதா என்பது பற்றி அவர் அதில் தெளிவான கருத்து எதையும் கூறவில்லை. எனினும் இந்தியா சீண்டும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்று அவர் எச்சரித்துள்ளார். அவ்வாறு இந்தியா செய்யுமாயின் அதற்கு உறுதியான எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நவாஷ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர்ப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் காண இந்தியா தயாராகி வருகின்றது என்றும் பிரதமர் ஷெரீப் குற்றஞ்சாட்டினார்.

(ஐ-6)

## சமாதான உடன்பாட்டை ஆதரித்து வட அயர்லாந்து மக்கள் வாக்களிப்பு!

லண்டன், மே 25

வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாக கடந்த மாதம் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கைக்கு ஆதரவாக வட அயர்லாந்து மக்கள் வாக்களித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது 71 சதவீதமான மக்கள் சமாதான உடன்படிக்கைக்குஆதரவாகவும், 29 வீதமான மக்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

இந்த வாக்கெடுப்பைத் தொடர்ந்து அடுத்த மாதமளவில் வட அயர்லாந்து சட்ட மன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

இந்தச் சட்ட மன்றம் ''அதிகாரப் பகிர்வு'' என்ற அடிப்படையில் இயங்கும்.

வட அயர்லாந்து தொடர்பான உடன்படிக்கையில் முக்கியமான தடை தாண்டப்பட்டுவிட்ட போதும் உடன்படிக்கையில் காணப்படும் வட அயர்லாந்து மாகாணத்தை ஜரிஸ் குடியரசுடன் இணைக்கும் அமைச்சர்கள் அளவிலான மன்றம் ஒன்றை அமைப்பது மற்றும் பரா இராணுவ கைதிகள் விடுவிக்கப்படுவது போன்ற முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

இதற்கிடையில் வட அயர்லாந்து சமாதான உடன்படிக்கை தொடர்பாக ஜரிஸ் குடியரசில் நடத்தப்பட்ட மற்றொரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் உடன்படிக்கைக்கு ஆதரவாக 95 சதவீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

(ஐ-6)

## கும்பல் குண்டு வீச்சு!

## ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவரின் தந்தை பலி!

பெங்களூர், மே 25

தென்னிந்திய மாநிலமான ஆந்திராவில் நடந்த குண்டுத் தாக்குதல் ஒன்றில் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவரின் தந்தை வை. எஸ். ராஜரெட்டி கொல்லப்பட்டார்.

உள்ளூர் தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் உமாமகேஸ்வர ரெட்டியின் தலைமையில் வந்த மக்கள் கும்பல் ஒன்று வை. எஸ். ராஜரெட்டிக்குச் சொந்தமான மோட்டார் கார் மீது குண்டுகளை வீசியதாகவும் அதனால் அவர் அவ்விடத்திலேயே பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜரெட்டியுடன் காரில் சென்ற மற்றொருவர் இந்தக் தாக்குதலில் காயமடைந்தார்.

சர்ச்சைக்குரியவராகக் கருதப்படும் 70 வயதான ராஜரெட்டியின் மரணம் ராஜல்லாசேனாப் பகுதியில் வன்முறைகளைத் தூண்டிவிடக் கூடும் என்று அஞ்சப்பட்டது.

## மத்திய மாகாண முதல்வர் பதவிக்கு அமைச்சர் ஜயரத்னவின் பெயர்

கொழும்பு, மே 25

பொது மக்கள் ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளரும் காணி விவசாய அமைச்சருமான தி.மு ஜயரத்னாவை மத்திய மாகாண சபை முதலமைச்சர் பதவிக்குரிய வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஆராயப்படுகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து மேற்படி பெயரை சிபார்சு செய்துள்ளனர்.

ஆனால் அமைச்சர் தி.மு. ஜயரத்னவிடம் இது தொடர்பாக ஜனாதிபதி கேட்ட போது ஆராய்ந்து முடிவு தெரிவிப்பதாக் கூறியுள்ளார்.

(ஐ-21)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்

**அருண்**

**புளொக் தயாரிப்பாளர்**



அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்

O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## பயிரழிவு விவரம் சேகரிப்பு

செம்பியன்பற்று, மே 25

வடமராட்சி கிழக்கில்அண்மையில் பெய்த கடும் மழையினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பான விவரங்களைக் கமக்கார அமைப்புக்கள் சேகரித்து உள்ளன.

(ஐ-36)

## 13-வதுபிரிகேட்டின் தளபதியாக நெவில்

கொழும்பு, மே 25

பூஸாவைத் தலைமையமாகக் கொண்டுள்ள 13ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் நெவில் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

யால, சரணாலயப் பிரதேசத்தில் தீவிரவாதிகள் சிறுகுழுக்களாக நடத்தி வரும் தாக்குதல்களை அடக்கி அப்பகுதியில் பூரண கட்டுப்பாட்டை நிலை நாட்டுவது இவரது பொறுப்பாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 13ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் ரி. ஜி. கெம்பிட்டிய இராணுவ தலையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-10-7)

## சிப்பாய் தற்கொலை

வவுனியா, மே 25

வவுனியா கிழக்கு தட்டுவேவ என்னும் இடத்தில் உள்ள முன்னணிக் காவலரணில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

பந்துல விஜயசிறி என்ற இராணுவச்சிப்பாயே தற்கொலை செய்து கொண்டவராவார். (இ-164-7)

## திருத்த வேலை

நல்லூர் முத்திரைச் சந்தியில் இயங்கி வரும் ஒன்றிணைக்கப்பட்ட கல்வி அலுவலகத்தில மின்சார திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. புதிதாக மின்விசிறிகள், மின் குமிழ்கள் ஆகியவை அமைக்கப்படுகின்றன. (ஐ-51)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 - 30 வயதுக்குட்பட்டோருக்கு

# கட்டாய ராணுவ சேவை

# அரசு ஆலோசிக்கிறது?

கொழும்பு, மே 25

18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களை கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தக்கூடிய வகையில் புதியசட்டம் இயற்றுவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

— இவ்வாறு அரச சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தத்தை நீண்ட காலத்துக்கு தொடர்வதனால் நாட்டின் அபிவிருத்தி சீர்குலைவதுடன் பொருளாதாரமும் பாதிக்கப்படும். எனவே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் அவசரமானது என பாதுகாப்பு ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

படைகளுக்கு ஆளணி பற்றாக்குறையே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தடையாகவுள்ளது. ஆளணி பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு இப்போது இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை தேடிப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவச் சேவையில் சேர இளைஞர்கள் முன்வராவிட்டால் கட்டாய இராணுவ சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பது தவிர்க்க முடியாது எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன — என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## பிரதேச செயலகத்துக்கு மலசலகூட உபகரணங்கள்

சண்டிலிப்பாய், மே 25

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மலசலகூடத்திற்குத் தேவையான ஒரு தொகை உபகரணங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளது.

இப் பிரிவில் மலசல கூடம் சேதமடைந்த குடும்பங்களுக்கு திருத்த வேலைகளுக்காக இந்த மலசல கூட உபகரணங்கள் விநியோகம் செய்யப்படவிருப்பதாக பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

(ஐ-135)

## புத்தளம் இந்துகோயிலில் 2 சிலைகள் கொள்ளை!

கொழும்பு, மே 25

புத்தளம் நகரில் உள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்த பழமைவாய்ந்த இரு சிலைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நகரின் மத்தியிலுள்ள மேற்படி ஆலயத்துக்குள் பிரவேசித்த இனந்தெரியாத கொள்ளையர்கள் கருங்கல்லினாலான பாலமுருகன் சிலையையும் மற்றுமொரு சிலையான கருங்கல்லினாலான நாக தம்பிரான் சிலையையும் சுகர்த்து எடுத்துச் சென்றுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த இச்சிலைகள் வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்வதற்காகத் திருடப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு தடவையும் இச்சிலைகளைக் களவாட எடுக்கப்பட்ட முயற்சி தக்க தருணத்தில் முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புத்தளம் பொலீஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ-10)

## 250 குடும்பங்களுக்கு பளையில் கொடுப்பனவு

மீளக் குடியேறிய பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 250 குடியிருப்பாளர்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுகள் முதற்கட்டமாக முகமாலை, கிளாலி, புலோப்பளை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார்.

(ஐ-117)

## வீதி திருத்தம்

சண்டிலிப்பாய் சீரணி சந்தியிலிருந்து மானிப்பாய்ச் சந்தி வரை செல்லும் பிரதான வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. நீண்டகாலமாக குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமான நிலையில் இந்த வீதி இருந்து வந்தது.

இதே வேளை —

சண்டிலிப்பாய்ச் சந்தியிலிருந்து தொட்டிலடி சந்தி வரை செல்லும் சண்டிலிப்பாய்ப்பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதி பலத்த சேதமடைந்த நிலையில் இருந்து வருகின்றது. கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை திருத்தப்படவில்லை.

(ஐ-135)

## தட்டச்சு பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி, மே 25

பளை பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள தட்டச்சு பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் உரிய சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார்.

(ஐ-171)

## மின் தடை

யாழ்ப்பாணம், மே 25

கொக்குவில் கிழக்கு நந்தாவில் லேன் பகுதிக்கான மின் விநியோகம் கடந்த இரு வாரங்களாக சீர் குலைந்துள்ளது. மின் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள கோளாறே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து யாழ். அரசடி வீதியிலுள்ள மின் சாரசபையின் யாழ். பிரதேச மின் தடை முறைப்பாட்டுப் பகுதியில் மேற்படி பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர்கள் பலரும் பலதடவைகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ-4)

## சீமெந்து பாவிப்பு குறித்து கண்காணிப்பு

சண்டிலிப்பாய், மே 25

இந்திய அரசு அன்பளிப்புச் செய்த சிமெந்தின் இரண்டாம் கட்ட விநியோகம் சண்டிலிப்பாயில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இந்த சிமெந்தை பெற்றவர்களும், தற்போது சிமெந்தை பெறுபவர்களும் தாங்கள் பெற்ற சிமெந்தை தகுந்த முறையில் பயன்படுத்துகிறார்களா என்பதை இதற்கென நியமிக்கப்பட்ட பிரதேச செயலக அதிகாரிகளும், அவ்வப் பிரிவு கிராம அலுவலர்களும் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

(ஐ-135)

## புளொட் உறுப்பினர் மீது சூடு!

மட்டக்களப்பு, மே 25

மட்டக்களப்பு — கல்முனை வீதி செட்டிபாளையத்தில் புளொட் உறுப்பினரொருவர் சுடப்பட்டார்.

ராமு எனப்படும் சத்துருக்கன் தில்லைநாதன் (24வயது) என்ற இந்த நபர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் செட்டிபாளையம் விசேட அதிரடிப்படை முகாமில் தங்கியிருப்பவர் என தெரியவருகிறது.

(இ-21)

## விவேகானந்தர் வீடியோக் காட்சி

திருநெல்வேலி, மே 25

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் எதிர்வரும் புதன்கிழமையன்று நண்பகல் சுவாமி விவேகானந்தர் பற்றிய வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

(ஐ-135)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்

திருமதி ச. ஜெயராசா அவர்களின் பாசமிகு மருமகனும்

திரு. க. பரராசசிங்கத்தின் அன்பு மகனுமாகிய

**செல்வன் ப. பிரகலாதன்**

அவர்களின் மரணத்தினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யாழ். இந்துமகளிர் கல்லூரி.

(56248)



## 31 ஆம்நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்ணுறவு 04 — 12 — 1945



விண்ணுறவு 25 — 04 — 1998

திருமதி

**இந்திராணி நற்குணநாதன்**

(உடுவில் ரைப்பிங் மாஸ்டர் மனைவி)

இறைவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ் வேளையில் 1998 - 05 - 25 ஆம் நாளான இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியநிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்து எமது துயரைப்பகிர்ந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கும்:

அன்னாரின் கணவர், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

''திருப்பதி''
மானிப்பாய் வீதி,
உடுவில் மருதனார்மடம்.

(56249)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**தர்மையா தம்பிமுத்து**

மலர்வு 22 — 01 — 1926

உதிர்வு 11 — 04 — 1998

அன்புடனும் பாசத்துடனும் எம்மை வழி நடத்தி எமைவிட்டுப் பிரிந்தாலும் எம்நெஞ்சத்தை விட்டகலாத அருமைத் தந்தையே! நீர் இறைவனடி சேர்ந்து நாற்பத்தைந்து நாள்கள் கடந்துவிட்டாலும் இம் மண்ணில் எம்முடல் வாழும் மட்டும் உங்களின் அன்புத் திருமுகம் மறையாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களின் பிரிவால் துயருறும்:

மனைவி: அன்னமுத்து, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
வாரையடி வீதி, சாவகச்சேரி.

(56250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்டிலிப்பாய்ப் பிரிவில்**

# 3 ஆலயங்களைத் திருத்த நிதி ஒதுக்கப்பட்டது

சண்டிலிப்பாய், மே 25

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த இரண்டு சைவ ஆலயங்களுக்கும் ஒரு கத்தோலிக்க தேவாலயத்திற்கும் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளுவதற்காக இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு மூன்று இலட்சம் ரூபாவும் —

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முருகமூர்த்தி ஆலயத்திற்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்—

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

## கோழிகள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 25

ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் பகுதிகளில் இரவுநேர கோழித்திருட்டு அதிகரித்துள்ளது.

கடந்த சில நாள்களாக அடிக்கடி இடம்பெற்றுவரும் இத்தகைய சம்பவங்களில் சுமார் 50-க்கும் மேற்பட்ட கோழிகள் திருட்டுப்போயுள்ளன. (ஐ-15-17)

# வலி. வடக்கில் குடியேறிய பலருக்கு ரூ. 5,000 இன்னும் கிடைக்கவில்லை

சுன்னாகம், மே 25

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த பெரும் எண்ணிக்கையான குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக அதிக பாதிப்புக்கு உட்பட்ட பிரதேசமான வலி. வடக்கில் இதுவரை 15 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மக்களே முழுமையாகவும். பகுதியாகவும் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 30 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமர முடியாமல் ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த 3 ஆயிரத்து 747 குடும்பங்களில் இதுவரை ஆயிரத்து 387 குடும்பங்களுக்கே ஐயாயிரம் ரூபா மீளக்குடியமாவுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் 2 ஆயிரத்து 280 பேர் நிவாரணம் பெறாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இம்முறை மிகக் குறைந்தளவானோருக்கே 5 ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை 80 பேருக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

ஏனைய பிரிவுகளோடு ஒப்பிடுமிடத்து இது குறைவானது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வடக்குப் பகுதி கடந்த இராணுவ நடவடிக்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-27)

## ஒடியற்கூழுக்கு ஏற்பட்ட கிராக்கி

யாழ்ப்பாணம், மே 25

ஒடியற்கூழ்ப் பிரியர்களுக்காக பனை அபிவிருத்திச் சபையால் கூழ் தயாரிக்கப்பட்டுக் கடந்த புதன்கிழமை விற்பனை செய்யப்பட்டது.

தயாரிக்கப்பட்ட கூழ் முழுவதும் விரைவிலேயே விற்று முடிந்ததையடுத்து அனேகமானோர் கூழ் வாங்க வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

பனை அபிவிருத்திச்சபையின் முகாமையாளர் எஸ். கோகுலதாஸன் கூழ் தயாரிப்பது தொடர்பாக உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்—

அனைவருக்கும் கூழ் குடிப்பதற்கு விருப்பம் உண்டு. ஆனால் பலருக்குச் சுவையாகக் கூழ் தயாரிக்கத் தெரியாமல் உள்ளது. இவர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் நோக்கிலேயே நாம் இந்தக் கூழ் தயாரிக்கும் பரீட்சார்த்த நடவடிக்கையில் ஈடுபட்டோம் எமது ஆதிகால உணவுக்கு இருக்கும் வரவேற்பை இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றி மூலம் நாம் அறிந்து கொள்ள முடிந்தது.

தயாரிக்கப்பட்ட கூழ் முழுவதும் சொற்ப நேரத்திலேயே விற்றுத்தீர்ந்துவிட்டது. பலர் கூழ் குடிப்பதற்கு ஆவலோடு வந்து கூழ் முடிவடைந்தமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை நாம் அவதானித்தோம்.

இதனையடுத்து நாம் எதிர்வரும் புதன்கிழமை அதிக அளவு கூழைத் தயாரிக்கத் தீர்மானித்துள்ளோம். அத்துடன் பலர் மாமிசம் சேர்க்கப்படாத கூழும் தயாரிக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனவே அந்தக் கூழையும் நாம் தயாரிக்க உள்ளோம்.

அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூழ் தயாரித்து விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளோம்.

கூழைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் முன்னதாகவே ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 875 இல் இயங்கும் எமது பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பிரிவில் பதிவு செய்துகொள்ள முடியும் — என்றார். (இ-9)

## வடமராட்சி கிழக்கில் மீன் விலை வீழ்ச்சி

செம்பியன்பற்று, மே 25

வடமராட்சிகிழக்குப் பகுதியில் பிடிக்கப்படும் மீன் வகைகளின் தொகை அதிகரித்துள்ளதால் மீனின்விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது.

அண்மையில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை அடுத்துஇப்பகுதியில் பாரை, ஒட்டி, ஓரா.சூடை போன்ற மீன்கள் பெருமளவில் பிடிக்கப்பட்டு வருகின்றன.

போதிய சந்தைவாய்ப்பின்மையால் மீனின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. மீனவர்கள் கருவாடு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். கருவாடும் சந்தையில் வெகுவாக விலை வீழ்ச்சி கண்டு வருவதால் இப்பகுதி மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள் கருவாட்டை கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்ப உதவுமாறு கோரியுள்ளன. (ஐ-36)


CEFE    gtz

ஸ்ரீ லங்கா ஜேர்மன் CEFE நிகழ்ச்சித்திட்டமும்
GTZ/ யாழ்ப்பாணப் புனர்வாழ்வு செயற்றிட்டமும்
யாழ். பல்கலைக்கழகம், யாழ். CEFE பயிற்றுனர் சங்கம்
என்பவற்றுடன் இணைந்து வழங்கும்

தொழில் முயற்சியாண்மை பயிற்சிநெறி

இலக்குக்குழு: (விண்ணப்பிக்கத் தகுதியுடையோர்)

★ தொழில் முயற்சியாண்மையாளர்கள்/ பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாண்மையாளர்கள்;

★ சங்க அங்கத்தவர்கள் — கைத்தொழிலாளர் சங்கம்/ வர்த்தகர் சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், LIFCO/ விவசாயிகள் சங்கம், பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

★ அலுவலர்கள் — பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகங்களின் முகாமையாளர்கள், சிக்கனக்கடன் உதவிக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள்.

பயிற்சி நெறி உள்ளடக்கம்:

★ தனிப்பட்ட முயற்சியாண்மை ஆற்றல்களை அடையாளம் கண்டு விருத்தி செய்தல்.
★ புதிய தொழில், தொழில்விருத்தி, தொழில் பரவலாக்கம் தொடர்பான யோசனைகளை அடையாளம் கண்டு வடிகட்டி தெரிவு செய்ய வழிகாட்டல்.
★ சந்தைப்படுத்தற்றிட்டம், உற்பத்தித்திட்டம், முகாமைத்துவத்திட்டம், நிதித்திட்டம் உள்ளடங்கிய தொழிற்றிட்டத்தினைத் தயாரித்தல்.
★ தயாரிக்கப்பட்ட தொழிற்றிட்டத்தினை வங்கியாளர், கடன் அல்லது உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியோரிடம் முன்வைத்தல்.
★ பயிற்சிநெறி முடிவடைந்தபின், பின் தொடர்சேவை (Follow - Up Service) குறைந்தது ஒரு வருடத்திற்கு வழங்கப்படும்.

பயிற்சி முறை:

GTZ ஜேர்மன் - CEFE முறைமை, இது வளர்ந்தோர் கற்கை முறைமை சார்ந்த தொழிற்கற்கை விளையாட்டுக்கள், அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் முறைகள் என்பவற்றை உள்ளடக்கும்.

பயிற்சியின் விசேட தன்மை:

இம்முறையில் பயிற்சி பெற்றோரில் 85% இனர் தங்கள் தொழிலினை விரிவுபடுத்தி அல்லது பரவலாக்கி வெற்றிகண்டுள்ளனர். 40% இனர் புதிதாக தொழில்களை ஆரம்பித்துள்ளார்கள், இது கடந்த கால அனுபவங்களால் உணரப்பட்டுள்ளது,

கற்கைமொழி: தமிழ்
பயிற்சிக்காலம்: ஒருகிழமையில் 5 நாள்கள் (மொத்தம் 14 நாள்கள்)
பயிற்சி நெறி ஆரம்பம்: ஆனி 24 ஆம் திகதி
பதிவுக்கட்டணம்: ரூ. 1000

பயிற்சிநெறிக்குரிய ஏனைய செலவுகள் அனைத்தும் இலவசம்.

விண்ணப்பப் படிவங்களை GTZ/ யாழ் புனர்வாழ்வு செயற்றிட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 ஜூன் 1998

தேர்வுக்கான நேர்முகப்பரீட்சைகள் ஜூன் மாத இரண்டாவது வாரத்தில் இடம்பெறும்.

தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:

TEAM LEADER
GTZ/JRP.
11, KANDY ROAD,
JAFFNA.

(சி/3815)



மீண்டும் யாழ். நகரில்!
அம்பிகாபதி பன்சி கூட்ஸ்

வாடிக்கையாளர்களே!

★ எம்மிடம் அழகு சாதனப் பொருள்கள்
★ பட்டின்ஸ் வகைகள்
★ புத்தம் புதிய கவரிங் நகைகள்
★ லேஸ் வகைகள்
★ சாறி வோடர்கள்
★ குஸோன் வகைகள்
★ தலைச்சோடனைகள்
★ பூச்செண்டுகள்

யாவற்றையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

No. 66, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(56232)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

HONDA- CD- 70 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No. 308, ஸ்ரீதேவி சலூன், ஆலடிச்சந்தி, கந்தர்மடம். (56230)

இறைச்சிக்கோழி (Broiler) Kg 170/- கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில்வீதி யாழ்ப்பாணம். (56220)

நாட்சார வீட்டின் ஓடுகள், கதவுகள், நிலைகள், மரங்கள் முழுமையாக விற்பனைக்குண்டு: ரூபா 1,75,000 ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை, மாலை 2 - 5 மணிவரை. (56229)

### தவறிவிட்டது

சின்னத்துரை ராஜ்குமார ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து P. T. ரெயிலர்ஸ், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (56243)

தங்கமாலை கருமணியுடன் இணைந்தது. கடந்த 12-05-98 அன்று இரத்மலானையிலிருந்து யாழ். வந்த Lion Air இல் அல்லது பலாலியிலிருந்து யாழ். வந்த வழியில் தவறியிருக்கலாம். கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.) திரு. சபாநாயகம், ''ரூடி கொட்'' இல. 33, கண்டி றோட், யாழ்ப்பாணம். (56198)

### மணமகள் தேவை

எமமிடம வங்கிகுமாஸ்தா, ஆசிரியர்கள், வர்த்தக உரிமையாளர்கள் ஜாதகக் குறிப்பு உண்டு. மணப்பெண் ஜாதகத்துடன் நேரில் (அல்லது) கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விநாயகர் திருமணசேவை, 63, கல்லூரி வீதி, நீராவியடி. (56222)

### ரி. வி டெக்குகள்

நஷனல் N V 380 EM, L 10 NE டெக்குகள் மற்றும் ரி.வி, டெக் உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சிவறஞ்சன், C/o P C சுப்பிரமணியம், உதய சூரியன் வீதி, உடுவில், சுன்னாகம். [56205]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் உங்களது வரலாறு. வரலாற்றை மறக்கலாமா? 300 நாடகங்களும், 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள் ரூபா 50 (56497)

---

# வாழ்த்துகின்றோம்

யா/ கொற்றாவத்தை அ. மி. த. க. பாடசாலை

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வன் கருணாநிதி றொபின்சன்

செல்வி திருநாமம் பிரதீபா

ஆகியோரை வாழ்த்துகின்றோம்.

நெறிப்படுத்திய அதிபர், கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்கள்,
நலன் விரும்பிகள்.

(சி-3812)

---

# முக்கிய அறிவித்தல்

சங்கானை
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
வரையுள்ளது-பதிவு இல. 2057

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கூட்டுறவுச் சட்ட விதி 18 (1)இன் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு புதிய உபவிதியை அங்கீகரிப்பதற்காக மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தை அழைகின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

இடம்:- மிருகவைத்தியர் காரியாலய மண்டபம், சண்டிலிப்பாய்,
நாள் :- 28 - 05 - 98 வியாழக்கிழமை,
நேரம்:- 10. 30 (புதியநேரம்)

எ. சின்னத்தம்பி,
கூட்டுறவு உத்தியோகத்தர், தரம் 1

(56189)

---

யாழ். நகரில்!

48 ஆண்டுகள் மக்கள் மனதில் நின்று நிலைத்த

**றாஜு ஸ்ரேரர்ஸ்**

70 ஆண்டுகள் உன்னதமான உள்ளூர்த் தயாரிப்பான
பேபி சோடா இவற்றை உருவாக்கிய

## அமரர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

தோற்றம் 12 — 07 — 1913 மறைவு 25 — 05 — 1988

# 10 ஆவது ஆண்டு நினைவலைகள்

வழித்தோன்றல்கள்:-

அமரர்
**சி. றாஜீ சேகரம்** (றாஜீ)
தோற்றம் 24 — 01 — 1949
இறப்பு 09 — 12 — 1964

அமரர்
**சி. குணசேகரம்** (ரகு)
தோற்றம் 07 — 08 — 1954
இறப்பு 14 — 07 — 1992

இவர்களை நினைவு கூருவதோடு

யாழ். நகரில்
- ★ அழகு சாதனப் பொருள்கள்
- ★ ஆடம்பர அன்பளிப்புப் பொருள்கள்
- ★ நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள்
- ★ மின்சாரப் பொருள்கள்
- ★ எமல்சன்
- ★ பாடசாலைப் பொருள்கள்
- ★ விளையாட்டுப் பொருள்கள்
- ★ சில்வர்
- ★ எசன்ஸ் வகைகள்

பெறுவதற்கு இன்றே நாடுங்கள்:

# றாஜு ஸ்ரேரர்ஸ்

றாஜு பில்டிங்,
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(56221)

---

# 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கலாநிதி ஆ. தியாகராசா
(M. A., M. LITT.)
(முன்னாள் தேசியப் பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர், கலாநிதி ஆ. தியாகராசா மகாவித்தியாலயம், காரைநகர்)

பிறப்பு 17 — 04 — 1916
இறப்பு 25 — 05 — 1981

அன்புக்குரிய ஆசானாய் மக்களுக்கு அறிவு தந்தாய்!
உலகம் போற்றும் உத்தமனாய் மக்களுக்கு சேவை செய்தாய்!
உன் கறைபடியாத கரத்தால் காரைமண் பெருமை பெற்றது!
உன் மக்கள் கதறியழ மண்ணோடு மறைந்து விட்டாய்;

உங்களை என்றும் மறவாத
மாணவன் சி. சிவபாதம்
(வங்கியாளர்)

''தவபவனம்'',
பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

(56113)

---

# ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 10 - 02 - 1911
ஆண்டவன் அடியில் 04 - 06 - 1997

அமரர்
## அ. க. வேலுப்பிள்ளை
(முன்னாள் கிறீன் லைன்ஸ் வங்கி சிறாப்பர், கீரிமலை சிறாப்பர் மட மேற்பார்வையாளர்)

திதி: 25 — 05 — 1998

இறையுடன் கலந்து ஆண்டொன்று
ஆனாலும் ஆறாத்துயரத்தில் தவிக்கின்றோம்
நாமிங்கு. நேசமுடன் எமை வளர்த்து
வாழவழி காட்டிவிட்டு பாசமதை
மறந்து தானும் பறந்த தெங்கே?

உங்கள் ஆத்ம சாந்திக்கு
இறைவனை வேண்டி நிற்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(56227)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## சுகுணா தனபாலசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு 09 — 10 — 1945
உதிர்வு 25 — 04 — 1998

அன்புடன், பண்புடன், பாசத்துடன்
எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

25-05-98 திங்கட்கிழமை காலை 10-30 மணியளவில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்: த. சரத்சந்திரன், த. சதீஸ்,
மற்றும்
குடும்பத்தினரும்

நீர்வேலி கந்தசாமி
கோயிலடி.

(சி / 3817)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முனைப்பும் எதிர்ப்பும்

அரசாங்கத்தின் உத்தேச அதிகாரப் பரவல் யோசனையில், வடக்கு — கிழக்குப் பிராந்திய சபைக்கு மேலதிகமாக, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை உள்ளடக்கி, "தென்கிழக்கு நிர்வாக அலகு" ஒன்றை நிறுவவும் வகை செய்யப்பட்டுள்ளது.

1994 ஓகஸ்ட் மாதத்தில் தேர்தல் முடிந்தகையோடு, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு பெரிதும் தேவைப்பட்டது. அந்த ஆதரவுக்குப் பிரதியுபகாரமாக அஷ்ரப்பின் தென்கிழக்கு நிர்வாக அலகு கோரிக்கைக்கு இணங்கப்பட்டது.

தென்கிழக்கு அலகு திட்டத்தை, முதலில் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஆதரிக்கவில்லை. எனினும் அமைச்சர் அஷ்ரப் அதனைப் பொருட்படுத்தவில்லை. தனது இலக்கை அடைவதில் முனைப்பாகச் செயற்பட்டார்.

அரசாங்கம் அமைக்க வேண்டும் என்ற ஒரே ஆசையுடன், அவசரத்துடன் ஜனாதிபதி சந்திரிகா தமது திட்டத்தை ஏற்றுக் கொண்டதால், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதனைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாகவும் உள்ளார். இது சம்பந்தமாக, தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் அவர் ஓர் இணக்கத்தைச் செய்துள்ளார்,

இத்தகைய ஒருசூழ்நிலையில்— பின்னணியில்— கிழக்கிலங்கையைச் சேர்ந்த மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களிடம் இருந்து தென்கிழக்கு அலகு அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியது.

இந்த எதிர்ப்பு அலையைச் சமாளிப்பதற்காக, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்த்தால், தென்கிழக்கு அலகு திட்டத்தை வாபஸ்பெறுவதாக அமைச்சர் அஷ்ரப் ஒரு முறை உறுதி அளித்தார்.

ஆனால்—

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 15 ஆவது தேசிய மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது, தென்கிழக்கு அலகை நிறுவும் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள் பூரண ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்தினார்கள்.

அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் தீர்வு யோசனை இப்போதைக்கு நிறைவேறும் அறிகுறி துளிகூடத் தென்படவில்லை. எனவே தென்பகுதிக்கு அலகு நடைமுறைக்கு வரும் என்று நம்புவதற்கும் ஏது எதுவுமில்லை.

எவ்வாறாயினும், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்களின் ஜனநாயக ரீதியான எதிர்ப்பை அமைச்சர் அஷ்ரப் அங்கீகரிப்பாரா என்பது நியாயமான கேள்வியே.

# யாழ். மாவட்ட வீதிகளைத் திருத்தும் திட்டத்துக்கு 2 கோடி ரூபா நிதி

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்துள்ள சில வீதிகளைத் திருத்தி அமைக்கும் திட்டத்திற்கு வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை 2 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழும் பிரதேச சபைகளின் கீழும் அமைந்துள்ள இந்த வீதிகளை புனரமைப்பதற்கான திட்டமொன்றை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக குழுவின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா முன் வைத்திருந்தார். இதற்கு 3 கோடி ரூபா நிதியையும் அவர் கோரி இருந்தார்.

இத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை 2 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் திருத்தியமைக்கப்படவுள்ள வீதிகளின் விவரம் வருமாறு:

★ நெடுந்தீவு: மாவெளி— பெரியதுறை வீதி.

★ வேலணை: நயினாதீவு - வங்களாவடி இறங்குதுறை, பிரதானவீதி.

★ வேலணை:— அனலைதீவு வடக்கு; தெற்கு இறங்குதுறைகள். பிரதான வீதி.

★ ஊர்காவற்றுறை:— எழுவைதீவு இறங்குதுறை. பிரதான வீதி.

★ சங்கானை:— சுழிபுரம் — றாத்தலடி வீதி.

★ உடுவில்:— அம்பலவாணர் வீதி, சுன்னாகம் மயிலணி வீதி.

★ தெல்லிப்பழை:— அளவெட்டி — பெரியவிளான் வீதி, அம்பனை — அளவெட்டி வீதி.

★ கோப்பாய்:— கோண்டாவில் — இருபாலை வீதி.

★ சண்டிலிப்பாய்;— கட்டுடை — நவாலி வீதி.

★ நல்லூர்:— பிள்ளையார் வீதி.

★ சாவகச்சேரி:— எழுதுமட்டுவாள் — கிளாலி வீதி, நுணாவில் — சரசாலைவீதி.

★ பருத்தித்துறை.—ஹாட்லிக் கல்லூரி வீதி, தும்பளை வீதி, தம்பசிட்டி வீதி.

★ கரவெட்டி:— வேதாரணிய பாடசாலை வீதி, யார்க்கரு — கிளவி தோட்டம் வீதி. (ஐ-9)

## எம். பிக்களின் உறவினர்கள் தேர்தலில் போட்டியிடத் தடை

கொழும்பு, மே 25

இம்முறை நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் ஊழல்கள் எவையும் இடம்பெறாமல் தடுப்பது, மற்றும் பொ. ஐ. மு நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் போட்டியிடுவதைத் தடுப்பது ஆகிய விடயங்களில் முடிந்தளவு கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளார்.

கடந்த தேர்தலின் போது சில பகுதிகளில் கொலைச் சம்பவங்கள் மற்றும் ஊழல்கள் இடம்பெற்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் மாகாண சபைத் தேர்தல்களின் போது அவ்வாறான முறைகேடுகள் மேற்கொள்ளப்பட இடமளிக்கப்படக்கூடாது என ஜனாதிபதி பணித்துள்ளார்.

மத்திய மாகாண பொ. ஐ. மு. செயற்குழுவினருடன் அலரி மாளிகையில் இடம்பெற்றபேச்சுவார்த்தைகளின் போதே ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரைகளை விடுத்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது பொ. ஐ. முன்னணியின் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (ஐ-10)

# வீட்டுத்தோட்டச் செய்கை 50 பேருக்கு பரிசளிப்பு

வடமராட்சி, மே 25

வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் 50 வீட்டுததோட்டச் செய்கையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

பரிசு பெற்ற 50 வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுள் துன்னாலை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லமுத்து முதலாவது பரிசினைப் பெற்றுக்கொண்டார்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புலோலி விவசாயப் போதனாசிரியர் அ. கோபிநாத் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

பூவாளி, பிளாஸ்டிக்வாளி, புல்லுக்கிண்டி ஆகிய பொருள்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

இப்பரிசில்கள் வழங்கவென பிரமாண அடிப்படையிலான நிதிஒதுக்கீட்டில் 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (ஐ - 173)

## மந்திகைக்கு மருந்து வந்தது

வடமராட்சி, மே 25

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இரண்டாம் சந்தாயத்துக்கான மருந்துப் பொருள்கள் வந்து சேர்ந்துள்ளன.

மருந்து வந்து சேர்ந்ததைத் தொடர்ந்து, இவ் வைத்தியசாலையில் நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியது. (ஐ-173)

## சந்தை வாய்ப்பு அதிகரிப்பு
# குரக்கன் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

சண்டிலிப்பாய், மே 25

டண்டத்தரிப்பு, மாதகல், சங்கானை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் குரக்கன் செய்கையில் அதிக ஆர்வங் காட்டி வருகின்றனர்.

நீரிழிவு நோயாளர்கள் குரக்கனை அதிகளவு வாங்கிப் பயன்படுத்தி வருவதாலும், பொதுமக்கள் தற்போது மாவுக்குப் பதிலாக குரக்கனை விரும்பி பாவிப்பதாலும் சந்தைகளில் குரக்கனின் விலை அதிகரித்துள்ளது. குரக்கன் செய்கையில் ஈடுபடுவதால் அதிக வருமானம் பெற முடியும் என்பதால் விவசாயிகள் இச் செய்கையில் அதிக ஆர்வங் கொண்டுள்ளனர். (ஐ-135)

### நாளை

வைகாசி - 12

செவ்வாய்க்கிழமை

திதி: பிரதமை நள்ளிரவு 12.00 வரை.

நட்சத்திரம்: ரோகிணி முன்னிரவு11.45 வரை

சுபநேரம் 10.22 -11.52

ராகுகாலம்: 02 52 -04 22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒழுங்கீனம் அல்லது கீழ்ப்படியாமை என்பது ஜனநாயாகத்துக்கும், சமுதாய சீரமைப்புக்கும் நேர் விரோதமானது.

## மரத்தால் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மே 25

மரத்துடன் உடலை இணைத்துக்கட்டிக்கொண்டு கள் எடுத்துக் கொண்டிருந்த வேளை இணைத்த கயிறு கழன்றதால் தவறிக் கீழே விழுந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மானிப்பாய் கட்டுடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூன்று குழந்தைகளின் தந்தையான டொமினிக் ஜோர்ஜ்ராசா (வயது 27) என்பவரே மரணமானவராவார். இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)

## நூலகர் காலமானார்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணப் பொது நூல் நிலையத்திற்கு அரும் பணியாற்றிய பிரதம நூலகர் க. நாகரத்தினம் கடந்த 18 ஆம் திகதி காலமானார்.

84 வயதான இவர் யாழ். பொதுசன நூல்நிலையக் கட்டடம் அமைக்கப்படுவதற்கு முன்னரும் அமைக்கப்பட்ட பின்னரும் அதன் பிரதம நூலகராகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# நொச்சியாகம சம்பவம்; ஊர்காவலருக்கு தொடர்பு

கொழும்பு, மே 25

அனுராதபுரம் நொச்சியாகம தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக அங்கு கடமையில் இருந்த் 3 ஊர்காவற்படை வீரர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புத்தொடர்பாக விசாரணைகளை நடத்திய நொச்சியாகம பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எஸ். கே. சேனபதி இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் ஊர்காவற்படையினருக்குத் தொடர்பு இருக்க வேண்டுமென்ற சந்தேகத்தின் பேரிலேயே ஊர்காவற்படை வீரர்கள் சேவையில் இருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டனர் எனவும் — ஒரு குறிப்பிட்ட குழுவினரின் சதிமுயற்சியே இக் குண்டு வெடிப்பு எனவும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## ஆசிரியர் சுயமதிப்பீடு

சங்கானை கல்விக்கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவதற்காக ஆசிரியர் சுயமதிப்பீடுபற்றிய கேள்விக்கொத்து சகல ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்ட 31 கேள்விகள் அதில் இடம் பெற்றுள்ளன. அவற்றுக்கு ஆம் அல்லது இல்லை என்ற பதில் அளிக்கவேண்டும். (ஐ-185)

# மாணவர்களின் வளர்ச்சியில் பெற்றோருக்கே அதிக பங்கு
## கருத்தரங்கில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 25

"இன்றைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், உடல், உள வளர்ச்சிக்கும் முக்கிய காரணகர்த்தாவாக விளங்குபவர்கள் பெற்றோர்களே. அவர்கள் தமது பிள்ளைகளின் வளர்ச்சிக்காக பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுடன் இணைந்து ஒரு முகமாகச் செயற்படுதல் இன்றியமையாதது."

யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாடசாலையில் கடந்த வாரம் நடைபெற்ற சுகாதாரவியற் கருத்தரங்கிற் கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி சபா ஜெயராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:—

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நல்ல உரமான அத்திவாரம் இடப்பட வேண்டும், அவர்களது எதிர்காலம் நல்லதாக அமையவும், சுபீட்சமாக இருக்கவும் பெற்றோர்கள் பாடுபட வேண்டும். தகுந்த பயிற்சிகளைக் கொடுப்பதன் மூலமும் விடயங்களைப் பகுப்பாய்வு செய்து, உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பதன் மூலமும் அதற்கு வித்திட முடியும். சிறுபராயத்திலிருந்தே எழுத்துறுப்புப் பழக்கத்தையும், வாசிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சொற்களின் உச்சரிப்பு அவதானமாகச் செயற்படுத்தப்பட வேண்டும். தமிழ்மொழியின் அழகே அதன் உச்சரிப்பில்தான மெருகூட்டப்படுகின்றது. பிறந்தநாள் பரிசாக விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொடுக்காமல் நல்ல அறிவூட்டும் கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பிறருக்கு உதவும் பழக்கமும் நம்மிடத்தே அருகி வருகிறது. ஆபத்துக் காலத்திலாவது வயது முதிர்ந்த தள்ளாத பருவத்திலாவது உதவும் பழக்கத்தை மாணவர்களிடையே வளர்த்துக் கொள்ள வேண்டும் — என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன படகுகளுடன்
# கடற் கண்காணிப்புப் பணியில் ஈடுபட
# கடற் பொலீஸ் பிரிவு அமைப்பு

கொழும்பு, மே 25
போதைப் பொருள்கள் மற்றும் ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களைக் கைதுசெய்வதற்கும் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களைக் கண்காணிப்பதற்கும் கடற் பொலிஸ் பிரிவை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த கடற் பொலிஸ் பிரிவின் தேவைக்கென ஆறு அதி நவீன வள்ளங்கள் வெளிநாட்டில் இருந்துபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பிரிவில் பணியாற்றவுள்ள பொலிசாருக்கு விசேட பயிற்சிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் இப்பிரிவின் கட்டளை அதிகாரியாக மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெரேரா நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்பொலிஸ் பிரிவு அமைக்கும் பணியின் முதலாவது கட்டம வெற்றியளித்தால் தொடர்ந்து வெளிநாட்டில் இருந்து மேலும் அதிநவீன வள்ளங்கள் பெறப்படும் எனவும் மேலும் பல அதிகாரிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு இப்பிரிவு மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் பொலிஸ் தலைமையகச் செய்திகள் தெரிவிப்பதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

# பாலர் பள்ளிக்கழகம் வடமராட்சியில் அமைப்பு

வடமராட்சி, மே 25
வடமராட்சிவடக்கு (பருத்தித்துறை) பிரதேசத்தில் பாலர் பாடசாலக்கழகம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பாலர் கல்வியை அபிவிருத்தி செய்பவும், பாலர் பாடசாலை ஆசிரியர்களின் நலன்களைப் பேணவும் இக்கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் ஏ. என். எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ, வி. கிருஷ்ணசாமி இக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்திஉத்தியோகத்தர்களான திரு. எஸ் சுப்பிரமணியம், செல்வி பரமேஸ்வரி பொன்னையா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-173)

# வடமராட்சி கிழக்குக்கும் மின் வழங்க கோரிக்கை

செம்பியன் பற்று, மே25
வடமராட்சி கிழக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், நாவலடிப் பகுதியில் உள்ள மக்கள் தமது பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குமாறு கோரியுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள மருதங்கேணி கிராமிய வைத்திய சாலைக்குக் கூட இதுவரை மின்சார வசதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 36)


## கண்ணீர் அஞ்சலி

### தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம்
(எழுதுவினைஞர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)

அவர்கள் திடீரென ஏற்பட்ட சுகயீனத்தினால் 22-05-98-ம் திகதியன்று இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை

(56257)



JAFFNA COLLEGE

## 175th Anniversary Celebrations Programme

20th June - Sports Festival - Finals

22nd June - Exhibition and Cultural Show
2 30 P.m - ''மயான காண்டம்''

23rd June - Exhibition - 9 00 - 2.00p.m
Cultural Show - ''காத்தவராயன்''

24th June - Exhibition - 9.00 - 2 00p.m
Cultural Show ''பொப் இசை''

26th June - Friday
9.00 A m Praise Service
10 15 A.m Opening of Primary School
10.30 A m Tree Planting Ceremony
11 00 A m Public Meeting, Distribution of Thirukural and Awards
1.30 Pm Alumni Lunch

27th June Saturday
Founderi Day and Prize giving
Chief guest Dr. John Walter Bicknell

Principal

(C/3824)


# குடும்பஸ்தர் கிணற்றுக்கு பலி

உறவினர் வீட்டில் இருந்து கதைத்து விட்டு வீடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்து பலியான சம்பவம் கடந்த வெள்ளி இரவு சுன்னாகம் மாசியப்பிட்டியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கிட்டினன் விஜயரத்தினம் (வயது 37) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

அண்மையில் பெய்த மழையினால் கிணறு நிறைந்திருந்ததாலும், கிணற்றுக்குள் இறங்கக் கூடிய வசதிகள் இல்லாததால் அவரை உடனடியாக மீட்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# வல்லை ஆஸ்பத்திரிக்கு குழாய்க் கிணறு

யாழ்ப்பாணம், மே 25
வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நிலவிய தண்ணீர்ப் பற்றாக் குறையை நீக்கு முகமாக குழாய்க் கிணறு ஒன்றை நோயாளர் நலன் புரிச் சங்கம் அமைத்துக் கொடுத்துள்ளது.

வைத்தியசாலையில் கடுமையாக நிலவிய தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தொடர்ந்து மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க. மயிலேறும்பெருமாள் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துத் தருமாறு நோயாளர் நலன் புரிச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவ் வேண்டுகோளுக்கிணங்க நோயாளர் நலன் புரிச் சங்கச் செயலாளர் பா. மீனாட்சி சுந்தரமும், பொருளாளர் சி. தனபாலசிங்கமும் எடுத்த பெரு முயற்சியின் காரணமாக அடுத்த இரு தினங்களில் வைத்தியசாலைக்குக் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. (ஐ-6)

# மாணவ தாதியரை நியமிக்க ஆஸ்பத்திரியில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 25
யாழ். போதனா வைத்திய சாலையில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக, மாணவத் தாதியர்களுக்கான நேர்முகப்பரீட்சை ஒன்று எதிர்வரும் புதன்கிழமையும், வியாழக்கிழமையும் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் எழுத்துப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவத் தாதியர் இம்முறை முதல் தடவையாக நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்நேர்முகப்பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் செயலக தொழில் வங்கியில் இருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சுமார் 200 பேர் தோற்றவிருக்கும் இந் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-15)

# அழியும் அருங்கலைப் பொருள்கள்

ஐம்பது வருடத்திற்கும் முற்பட்ட பல வரலாறு சார்ந்த பதிவுகளும், பொருள்களும், ஓவியங்களும், புகைப்படங்களும் மாமனிதர் கலைஞானி அவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. காலத்தின் பாதிப்பினால் ஏற்பட்ட வடுக்களினால் தளர்ந்துபோன கலைஞானி அவர்கள், தனது வாழ்நாளில் சேகரித்து வைத்தவற்றை ஒரு தகுந்த, அதைப் பேணிப் பாதுகாக்க ஒரு கரத்தை தேடுகின்றார். ஆனால் இதுவரை எவரும் முன்வரவில்லை என்பதை எண்ணி அவர் கவலையுற்றுள்ளார்.

அவரது சேகரிப்புள் வளரும் சந்ததிக்கும் வருங்கால சந்ததிக்கும் பல சரித்திர உண்மைகளை விளம்பி நிற்கும் தகுதிபடைத்தவை. அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் கடமை தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமை என்பதே எனது எணிப்பு. உதயன் பத்திரிகையில் அவரது படைப்புக்களினதும், சேகரிப்புகளினதும் கண்காட்சி பற்றி செய்தி வெளியிடப்பட்டிருந்து. செய்தியில் குறிப்பிடப்பட்ட இடத்திற்குச் சென்று பார்த்தபோதுதான் அந்தப் பெருங்கலைஞனின் அவல நிலை புரிந்தது.

காட்சிப் பொருள்களில் பல கறையானுக்கு உணவாகியிருந்தன. குப்பை கூளம் போலக் காட்சியளித்தது அக்கூடம். ஒழுங்குபடுத்தப் படாத ஓவியங்களும், சேகரிப்புக்களும், உடைந்துபோன கண்ணாடிகளும் காணப்பட்டன. அவற்றின் மத்தியில் நடப்பதற்கே தயங்கும் கால்களுடன் ஒரு வயோதிபர். ஆம், அவர்தான் கலைஞானி அவர்கள். ஒரு கலைச் சிற்பிக்கு இந்நிலை, என்று நினைக்கும் போது மிகுந்த வேதனைக்குரிய விடயமாகியுள்ளது.

இப்படியான அருங்கலைப் பொருள்களுக்கு கொடுக்கும் மதிப்போ அலாதியானது. ஆனால் நமது சமூகம், அவர்களைப்போல பழங்கால சேகரிப்பில் ஏனோ ஆர்வம் காட்ட முன்வருகிறார்கள் இல்லை. அந்த மனிதரின் சேகரிப்புகளில் பலவும் இலங்கையில் தமிழர்களின் இருப்பிற்கும் சான்று பகர்கின்றன. இவற்றை நாம் அழிய விட்டால் பல சரித்திர உண்மைகளும் மறைந்துவிட இடமுண்டு. ஆகவே, தமிழ்பேசும் உள்ளங்களே சற்றுச் சிந்தியுங்கள்.

த. துசிதா
சாவகச்சேரி

# அதிக விலைக்கு விற்கவில்லை

17-5-1998 உதயன் பத்திரிகையில் வைத்திய நிபுணர் சேவை இது தானா? என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம் ஒன்றில் சில மருந்துகள் தனக்கு மிகவும் கூடிய விலையில் வழங்கப்பட்டதாக ஒரு பெண்மணி எழுதியிருந்தார்.

வாசகர் திருமுகம்

சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர் நிலையம் எது என்பதை குறிப்பிடாததால், பலரின் கேள்விகளுக்கு விடை பகரவேண்டிய சிரமம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் தலைப்பில் வைத்திய நிபுணர் சேவை இது தானா? என்று குறிப்பிட்டது சேவை மனப்பான்மையுடன் எம்மிடையே நடமாடும் வைத்திய நிபுணர்களையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது என்பதையும் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேலும் எமது நிலையத்தில் கடிதத்தில் குறிப்பிட்டது போல் அதிக விலையில் எவருக்கும் மருந்துகள் விற்கப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர்கள்.
புதிய வைத்தியநிபுணர் ஆலோசனை நிலையம் (இலங்கை வங்கி பிரதான கிளை அண்மையில்),
308, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# மருந்தின் சரியான விலை

உதயன் 17 - 05 - 98 ஆம் திகதிய உதயனில் சங்கானையைச் சேர்ந்த திருமதி பாமினி செல்வரட்ணம் ''வாசகர் திருமுகம்'' பகுதியில் எழுதியுள்ள வைத்திய நிபுணர் சேவை இது தானா? என்னும் தலைப்பிலுள்ள கடிதத்தில் காணப்பட்ட தவறைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அவரின் கூற்றுப்படி மூன்றாவது மருந்தாகக் குறிப்பிட்டிருக்கும் ''கிஸ்மனொல்'' (Hismanal) ஒரு வில்லையின் விலை ரூபா 1/50. ஆனால் நாங்கள் இம் மருந்தின் விநியோகத்தர் என்ற ரீதியில் இம் மருந்தின் மொத்த விலையை குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம். பத்து வில்லைகள் கொண்ட பெட்டியின் விலை ரூபா இருநூற்றிநாற்பது ஆகும். சேவை மனப்பான்மையுடன் ஒரு வில்லையை லாபம் கருதாது விற்றாலும் ரூபா இருபத்தி நான்கு ஆகிறது. அந்தக் கணக்கின் படி பார்த்தால் ஐந்து வில்லைகளின் விலை நூற்றியிருபது ரூபா ஆகிறது.

பொ. இராசதுரை
முகாமையாளர்,
வனிகா மெடிக்கல்ஸ்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ அதிகாரி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 25

கிளிநொச்சி முன்னரங்க நிலைமீது கடந்த வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் ஓர் அதிகாரி உயிரிழந்தார் என்று பலாலி படைத்தலைமையகச் செய்திக்குறிப்பு தெரிவித்தது.

(இ-3)

## வேண்டுகோள்

சண்டிலிப்பாய், மே 25

தற்போது சண்டிலிப்பாயில் இயங்கி வரும் சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்கான கால் நடை வைத்திய அலுவலகமாகச் செயற்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று மேலிடத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வட்டுக்கோட்டையில் இயங்கி வரும் கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தை சங்கானை பிரதேச (வலி. மேற்கு) செயலகப் பிரிவுக்கான கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகமாக இயங்கச் செய்யலாம் என்றும் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இயங்கச் செய்வதால் இந்த இரு பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள பொதுமக்களுக்கு மிகவும் வசதியாக இருக்குமெனவும் அவர்கள் தங்கள் கால் நடை வைத்திய தேவைகளை இலகுவாக நிறைவேற்ற வசதி ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இ-135)

# வன்னி மாவட்ட அபிவிருத்திக்கு புனர்நிர்மாண, புனர்வாழ்வுத் திட்டம்

கொழும்பு, மே 25

வன்னி மாவட்டத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு முன்னோடியாக புனர் நிர்மாண, புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று வகுக்கப்படவிருக்கிறது.

இத்திட்டம் தொடர்பாக கொழும்பில் இன்று நடைபெறும் கூட்டம் ஒன்றில் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் அரச அதிபர்கள் பங்குபற்றுகிறார்கள்.

அந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடர்பாக விசேட திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

அந்தத் திட்டம் வெளிநாட்டுநிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சாம்பல் தீவு சுற்றிவளைப்பு

திருகோணமலை, மே 25

திருகோணமலை சாம்பல் தீவுப் பகுதி நேற்றுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் இடம் பெற்று சிலர் விசாரணைக்காக முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பிஸ்டல்குழுவால் சுடப்பட்டதையடுத்து நேற்றுத் தேடுதல் இடம்பெற்றது. (இ-3)

## உயிலங்குளம் ஊடாக மீண்டும் போக்குவரத்து

வவுனியா, மே 25

கடந்த ஒருவார காலமாக தடைப்பட்டிருந்த இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கான போக்குவரத்து நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியே செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்சமயம் நீக்கப்பட்டுள்ளதாகவும் —

இதனை அடுத்து அங்கிருந்து மக்கள் நேற்று முன்தினம் முதல் உயிலங்குளம் ஊடாக மன்னார், வவுனியாப் பகுதிக்கு வந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

ஒருவார இடைவெளிக்குப் பின்னர் அங்கிருந்து சர்வதேச தொண்டர் அமைப்பு வாகனங்களும், உணவுப் பொருள் எடுத்துச்செல்லும் வாகனங்களும் வவுனியாவுக்கு வந்தன. (இ-3)

## தேடுதல்

யாழ்ப்பாணம், மே 25

வடமராட்சிப் பகுதி நவுண்டில், இரும்பு மதவடிப் பகுதிகளை உள்ளடக்கி நேற்றுக் காலை படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (இ-15)

## பன்னவேலை பயிற்சி வகுப்பு

தென்மராட்சி மே 24

பளை பிரதேச செயலகத்தினால் பன்னவேலைப் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதமளவில் செல்வபுரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(இ-117)

## கிளைமோர் கண்ணி மீட்பு

யாழ்ப்பாணம், மே 25

தென்மராட்சிப் பிரிவில் முகமாலையில் கடந்த வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட படையினர் ஜொனி மிதிவெடியுடன் பொருத்தப்பட்டிருந்தகிளைமோர் கண்ணிவெடி ஒன்றையும், கிரனேட் ஒன்றையும் மீட்டுள்ளதாகப் பலாலித் தலைமையக செய்திக்குறிப்பு ஒன்று தெரிவித்தது.

பின்னர் அவை செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# புலிகளுக்கு உதவ வேண்டாம் என்று படையினர் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 25

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு உதவி செய்பவர்களுக்கு எதிராக சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பலாலி பாதுகாப்புத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டளை அதிகாரிக்காக கப்டன் எஸ். ரீ. ஏ. சாந்த தேவவினால் விடுக்கப்பட்டுள்ள இந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளை ஒன்று சேர்த்து, அவர்களிடம் இருந்து இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு தேவையான பல்வேறு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் துயிந்தன் என்பவர் புங்குடுதீவுப் பகுதியில் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாக நம்பகரமான தகவல் கிடைத்துள்ளது.

சட்டத்துக்கு விரோதமான முறையில் செயற்படும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எந்த விதத்திலும் உதவிகள் செய்யக் கூடாது என யாழ். மக்களுக்கு அரசாங்கம் பல்வேறு தடவைகள் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்பவர்களுக்கு எதிராக சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து நீங்கள் பெற்றுக்கொண்ட சமாதானத்தையும், ஐக்கியத்தையும் பாதுகாப்பது யாழ். மக்களாகிய உங்கள் பொறுப்பாகும்.

அதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவிகளை செய்யும் எந்தவொரு நபரையும் கைது செய்து சிறை வைப்பதுடன் சமாதானத்தைச் சீர் குலைக்க முற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது எமது பொறுப்பாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். — இப்படி அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ-3)

## மாதாந்த இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் இணுவில் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த இசை நிகழ்வில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இசை நிகழ்வுகளாக இணுவில் கோ. இரத்தினகுமார் குழுவினரின் மங்கள இசைக் கச்சேரி, மருதனார்மடம் நுண்கலைப்பீட விரிவுரையாளர் இசைமணி வ. செல்லத்துரையின் கர்நாடக இசைக் கச்சேரி ஆகியன இடம்பெறும்.

இசைக்கச்சேரிக்கு வ. குகபரன் வயலினும், நுண்கலைப் பீட விரிவுரையாளர் எம். சிதம்பரநாதன் மிருதங்கமும் வாசிப்பார்கள். (இ-3)

## திருத்தம்

நேற்றைய உதயன் 9 ஆம் பக்கத்தில் பிரசுரமான, செல்வன் கஜேந்திரனுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் விளம்பரத்தில் —

அவரது தந்தையாரின் பெயர் திரு. வே தூயகுமாரன் என்றிருக்க வேண்டும். துரைகுமாரன் என்று பிழையாக அச்சாகியதற்கு வருந்துகின்றோம்.


உ

இருபாலை - கட்டைப்பிராய்

## அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயில்

## நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகக் கிரியைகள்:

நாளை செவ்வாய்க்கிழமை காலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும்.

எண்ணெய்க் காப்பு சார்த்துதல்:

வியாழக்கிழமை (28-05-1998) காலை 7-00 மணி முதல் மாலை 2-00 மணி வரை.

மகாகும்பாபிஷேகம்:

வெள்ளிக்கிழமை (29-05-1998) காலை 6-58 முதல் 8-00 மணி வரை.

— அடியார்கள்

(சி/3826)


# மரண அறிவித்தல்கள்

## ஆனந்தர் ஸ்ரீதரன்

(ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர்)

இணுவில் கிழக்கு, இளந்தாரியார் கோயிலடியைச் சேர்ந்த ஆனந்தர் ஸ்ரீதரன் 24 - 05 - 98 இல் காலமானார்.

இவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் மா. ஆனந்தர், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை ஆ. இராசம்மா (பஞ்சவர்ணம்) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும். காலஞ்சென்ற சி. பொன்னுத்துரை, பத்மாவதி ஆகியோரின் மருமகனும், வத்சலாவின் (ராணியின்) அன்புக் கணவரும், சுரேந்திரனின் (மாணவன் ஆண்டு 13 A/L 98 வர்த்தகப் பிரிவு — கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன் (பொறியியலாளர்), ஸ்ரீஞானகுரு (ஆஸ்திரேலியா), கமலாசனி (இந்தியா), பத்மலோசனி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுசீலை சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவநாயகி இராசதுரை, சிவபாலன் (பதுளை), மிதிலைச் செல்வி (சித்தமருத்துவத்துறை, கைதடி வளாகம்), மனோகரன் (லேக் ஹவுஸ், கொழும்பு), ஆனந்த குலேந்திரன் (லண்டன்), ஸ்ரீஞானகௌரி (ராணி ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(25-05-98) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்குமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
வத்சலா (ராணி)
(மனைவி)
ஸ்ரீ. சுரேந்திரன்
(மகன்)

இளந்தாரியார் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

(56262)

## திருமதி பரமேஸ்வரி பரமகுருநாதன்

கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி ப.பரமேஸ்வரி அவர்கள் நேற்று (24-05-98) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் அம்பலவாணர் பரமகுருநாதனின் அன்பு மனைவியும், செல்லையா கனகசபாபதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், சித்தன்கேணியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை அம்பலவாணர் தம்பதிகளின் அன்பு மருமகளும், மயூரேசனின் (3 ஆம் ஆண்டு யாழ். மருத்துவபீட மாணவன்) பாசமிகு தாயாரும், சு. மங்கையர்க்கரசி, பொ. புவனேஸ்வரி, க. பாலசுப்பிரமணியம் (சிமெந்து கூட்டுத்தாபனம், கொழும்பு), கி. தில்லைராஜேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும், த. சுந்தரலிங்கம் (வவுனியா), பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் (பொன்னாலை), பா. இந்திராதேவி (சிமெந்து கூட்டுத்தாபனம், கொழும்பு), சி. கிருஷ்ணமூர்த்தி (யாழ். மாநகரசபை) ஆகியோரின் மைத்துனியும், கி. திவ்வியா, கி. சௌமயா (யாழ். இ. ம. ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், பா. மாதங்கி, பா. நர்த்தனன், பா. வித்தகன், பா. சுபாங்கி ஆகியோரின் பெரிய மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ப. மயூரேசன் (மகன்)
(17 ஆம் அணி மருத்துவபீடம்)

(56268)

## சுப்பையா ஆறுமுகராசா

கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகராசா நேற்று மாலை 5 மணிக்குக் காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கொக்குவில் கிழக்கு சட்டத்தரணி காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற றூபாவின் (லண்டன்) அன்பு அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-05-98) திங்கட்கிழமை மாலை நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ச. ஆறுமுகம்
(சகோதரி)

பிரம்படி,
கொக்குவில்.

(சி/3827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சந்தைக் கட்டடத்துக்குள் எவரும் நுழையக்கூடாது

## திருமலை அரச அதிபர் நகர முதல்வருக்குக் கடிதம்

திருகோணமலை மே 25

திருகோணமலையில் கலவரம் ஒன்று உருவாவதைத் தடுக்கும் பொருட்டு நவீன சந்தைக் கட்டடத்துக்குள் எவரும் நுழையக்கூடாது.

திருகோணமலை அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவிக்கும் ஒரு கடிதத்தை திருமலை நகராட்சி மன்றத் தலைவர் எஸ். சூரியமூர்த்திக்கு அனுப்பியுள்ளார்.

கலவரம் உருவாவதை அனுமதிக்கக்கூடாது என்பதற்காக சந்தைக் கட்டடத்துக்குள் எவரும் நுழைய அனுமதிக்கக்கூடாது என்று பொலீஸாருக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் அரச அதிபர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

''நவீன சந்தை மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்டது. அது நகராட்சி மன்றத்துக்குச் சொந்தமானது. அச்சந்தைக்குள் போவதற்கு எவரும் தடை விதிக்க முடியாது—என்று நகராட்சிமன்றத் தலைவர் சூரியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நவீன சந்தை விவகாரம் தற்சமயம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது (இ-3)

# பாக். விமானம் கடத்தப்பட்டது

இஸ்லாமபாத், மே 25

பாகிஸ்தானில் உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று பாகிஸ்தானில் இருந்து கராச்சிக்குப்போகும் வழியில் 38 பயணிகளுடனும், 5 விமானச் சிப்பந்திகளுடனும் கடத்தப்பட்டது.

விமானத்தைக் கடத்திய மூன்று இந்தியர்கள் விமானத்தை இந்தியாவுக்கு செலுத்துமாறு விமானிக்கு உத்தரவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானம் இந்தியாவிலுள்ள எந்த ஒரு விமான நிலையத்திலும் இறங்கவில்லை என்று இந்திய விமானத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பிந்திக் கிடைத்த தகவலின்படி விமானம் பாகிஸ்தானில் உள்ள விமான நிலையம் ஒன்றில் தரை இறங்கியுள்ளதாகவும்—

பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் அந்த விமானத்தைச் சுற்றி வளைத்துள்ளன என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-9-10)

## புலி உறுப்பினர் கைதானதாக தெரிவிப்பு

மட்டக்களப்பு கொடுவாமடு பாலம் இராணுவமுகாம் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் விடுதலைப் புலி உறுப்பினர்களில் ஒருவர் நேற்று மீறாகேணி பொலீஸ் காவல் நிலையம் ஒன்றில் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்சப்பட்டது.

தாக்குதலின் பின் வழி தவறி அலைந்தபோது இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாண்டிருப்பு வாசியான தங்கத்துரை சாந்தகுமார் (வயது 18) என்பவரே மேற்படி உறுப்பினர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர் கொடுத்த தகவலை அடுத்து ரி81- 1, கிரனேட்- 1 என்பன மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## தலதா மாளிகை நிதி மோசடி

## மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகள் சீற்றம்!

கொழும்பு, மே. 25

தலதா மாளிகையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதிமோசடியைக் கண்டறிய ஜனாதிபதி விசாரணைக்குழு அமைக்கப்படும் என்று வெளியான செய்திகளை மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

இந்த விசாரணைக்குழு அமைப்பது தொடர்பாக எமக்குக் கூட அறிவிக்காமல், பத்திரிகைகளுக்குச் செய்தி வெளியிட்டமை எம்மை அவமானப்படுத்தும் செயலாகும். இதையிட்டு எமது கவலையை வெளியிடுகிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளால் தலதா மாளிகை தாக்கப்பட்ட செயல் உலகில் உள்ள பௌத்தர்களால் ஈர்க்கப்படும் நேரத்தில், அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடியதாக விடுக்கப்பட்ட செய்திக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர். (இ-3-10)

## பெண் பொலீஸின் துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு ஓடிய நபர்கள்

கொழும்பு, மே 25

கட்டுநாயக்க வீதித்தடை முகாமில் பணியில் இருந்த பெண் பொலீஸார் ஒருவருக்கு மிளகாய்த்தூள் தண்ணீரைத் தெளித்துவிட்டு அவரது துப்பாக்கியை பறித்துக் கொண்டு இருவர் தப்பி ஓடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கியை அபகரித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடியவர்களை பொலீஸார் பின்னர் கைது செய்தனர்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர் அவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். (இ-10-3)

## மாணவி மரணம்

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவிக்கு வலிப்புஏற்பட்டு ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சொற்ப நேரத்தில் மரணமானார்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த யோகரத்தினம் சுபோதினி (வயது 13) என்பவரே மரணமானவராவார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரன் விசாரணை நடத்தினார். (இ-117)

## பதில்..

(முதலாம் பக்கத் தொடர்)

கையில் தம்பிராசா குட்டிராசா (24 வயது) என்பவரும்—

கொல்லப்பட்ட பொலீஸாரின் சடலத்தை எடுத்துவரச் சென்ற பொலீஸ் வாகனத்திலிருந்து தீர்க்கப்பட்ட வேட்டுக்களால் நிலாவெளி வாசியான வேலுப்பிள்ளை தவராசா ( 24 வயது ) என்பவரும் — பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

எமது வீடியோ CD வெளியீடுகள்!
★ இனியவளே
★ துள்ளித் திரிந்த காலம்
★ ஜீன்ஸ்
★ அவள் வருவாளா
★ 007 ஜேம்ஸ்பொன்டின் Tomorrow Never Dies
அடுத்த வெளியீடு!
பிரகாஷ்ராஜ் நடித்த
★ அவள் ஒரு சீதை
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3825)

## குஞ்சுக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

களும் —

அதே இடத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் ஒரு புலி உறுப்பினரும்—கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-9)

# பனை அபி. சபையின் பொருள்களை உற்பத்திசெய்ய முடியாத நிலை

## முதலீடு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

பனை அபிவிருத்திச்சபையினால் புதிதாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை தொடர்ச்சியாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு எவரும் முதலீடு செய்ய முன்வரவில்லை இதனால் புதிய உற்பத்திப் பொருள்கள்தொடர்ச்சியாக வெளிவர முடியாது உள்ளன.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர் எஸ். கோகுலதாஸன் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையினர் பனம் பழத்தில் இருந்து ஷம்பூ, வைன், சவர்க்காரம் போன்ற பல பொருள்களை உற்பத்தி செய்யும் வழிமுறைகளைக் கண்டுபிடித்துள்ளதோடு அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

இறக்குமதிப் பொருள்களுடன் போட்டி போடக்கூடிய அளவுக்கு இங்கு தயாரிக்கப்பட்டுள்ள பொருட்கள் தரத்துடன் காணப்படுகின்றன. ஆனால் இவற்றை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதற்கு போதிய வசதிகள் பனை அபிவிருத்திச் சபையிடம் இல்லை.

எனவே இந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய முன்வரும் நிறுவனத்துக்கு நாம் தொழில்நுட்ப வசதிகளை வழங்க தயாராக உள்ளோம் என அவர் தெரிவித்தார். (இ-9)

## 3 கோயிலில் திருட்டு

வலி. தென்மேற்கு, மே 25

நவாலி வடக்குப் பகுதியில் உள்ள மூன்று கோயில்களில் ஒரே நாளில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-[illegible]5)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தற்கொலை அணிகள் இரண்டும் மட்டக்களப்பில் இருந்து வந்ததாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்திய அணுகுண்டுப் பரிசோதனையை இலங்கை ஆதரித்தது சீனாவை ஆத்திரமடையச் செய்துள்ளது என்றும் —

எனவே கதிர்காமர் அதற்காகவே சீனா சென்றுள்ளார் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரை வலுப்படுத்தப் புதிய ஆயுதங்களை சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யவேண்டிய நிலையில் இலங்கை இருந்து வருகிறது.

இப்படியான நிலையில் இந்திய அரசின் அணுவெடிப்புப் பரிசோதனைகளுக்கு ஆதரவான கருத்துக்களை இலங்கை வெளியிட்டது சீனாவைச் சீற்றமடையச் செய்திருப்பதாக [illegible] தெரிவிக்கின்றன. (இ-9-3)

## செங்கலடி...

(முதலாம் பக்கத் தொடர்)

'புளொட்' முகாம் பாலத்துக்கு அருகில் உள்ளது.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலை முறியடிக்க 40 முதல் 50 வரையான தொடர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டார்கள்.

இதன் காரணமாக செங்கலடிப் பிரதேசத்தில் சில வீடுகள் சேதமடைந்தன.

தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்தாவது நபர் பொது மகன் ஆவார்.

செங்கலடி வாசியான சின்னத்தம்பி கதிரமலையே (50 வயது) இறந்தவர் ஆவார்.

ஒரு பகுதி ஆயுதங்கள் மற்றும் சில உடமைகளுடன் புளொட் உறுப்பினர் யோகேஸ் என்பவரின் சடலமும் விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

அதேசமயம் செங்கலடி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதல் படையினரால் முறியடிக்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 30 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தார்கள் என்றும் —

பலர் காயமடைந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை வரை செங்கலடி முகாமைச் சுற்றிச் சண்டைகள் இடம்பெற்றன என்றும் —

முகாமில் இருந்த படையினருக்குத் துணையாக வேறு இடங்களில் இருந்தும் படையினர் விரைந்துசென்று தாக்குதல் நடத்தினர் என்றும் —

தப்பிச் சென்ற விடுதலைப் புலிகளில் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-9-21)

## மரண அறிவித்தல்

### கனகசபை பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய உதவி அரச அதிபர்)

காரைநகர், தபாற்கந்தோரடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகசபை பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று 24-5-98 இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி இர்ாசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், தவநாயகியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரன் (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக் கழகம்), நாகேஸ்வரி (C. I. M.A., கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கணேசன், சிதம்பரநாதன், ஆனந்தராஜா, கருணாகரன், கோபாலன் மற்றும் தியாகராஜா (லண்டன்), நாகரட்ணம், இராஜேஸ்வரன் (தொழில் நுட்ப உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), நவமணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. நாகேஸ்வரன்
(மகன்)

91/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(56253)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] மனையில் 25-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org